தமிழ்முரசு / 1/3/17



தென்மாவட்ட அளவில் நடந்த ஐவர் பூப்பந்தாட்ட போட்டியில் தூத்துக்குடி இந்தியன் ஏவிலேசன் அகாடமி கோப்பையை வென்றது.

## பூப்பந்தாட்ட போட்டி

# தூத்துக்குடி அணிக்கு வெற்றி கோப்பை

தூத்துக்குடி, மார்ச் 1-

தென் மாவட்ட அளவிலான ஐவர் பூபந்தாட்ட போட்டி நடைபெற்றது. போட்டியில் தூத்துக்குடி, திருநெல் வலி, கன்னியாகுமரி, மதுரை, திண்டுக்கல், விருதுந ர், சிவகங்கை உள்ளிட்ட 7 மாவட்டங்களை சேர்ந்த அணிகள் கலந்து கொண்டன. இதில் முதல் பரிசு சுழற்கோப்பையை தூத்துக்குடி இந்தியன் ஏவிலேசன் அகாடமி வென்றது. 2ம் பரிசு மதுரை கின்ஸ்டார் அணி பெற்றது. 3ம் பரிசு திண்டுக்கல் அணி பெற்றது. 4ம் பரிசு சோழவந்தான் அணி பெற்றது. விழாவில் எஸ்ஏவி பள்ளி உடற்கல்வி இயக்குநர் குப்புசாமி வரவேற்புரையாற்றினார். மாநில துணைத்தலைவர் சீனிவாசன் வாழ்த்துரை வழங்கினார். முதல் பரிசினை எஸ்.டி.ஆர். சாமுவேல்ராஜ், 2ம் பரிசினை தொழிலதிபர் ஜெயராமன் ஆகியோர் வழங்கினர்.

நிகழச்சியில் மாவட்ட கூடைபந்தாட்ட செயலாளர் சுரேஷ் ராஜா, வின்சென்ட் தர்மராஜ், சங்கர் நாராயணன், டேனியல், ஜெயசந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். ராமசந்திரன் நன்றியுரை வழங்கினார். தூத்துக்குடி அணியில் விளையாடிய முருகன் சிறந்த ஆட்டக்காரர் பரிசு பெற்றார்.